


புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




வெள்ளி ❖ ஜூன். 09, 2023 — புதுக்கோட்டை — 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 245 ❖ ரூ.10

### பதவிப் பசியால் ஓபிஎஸ் வழக்கு தாக்கல் - உயர் நீதிமன்றத்தில் அதிமுக தரப்பு

# வாதம்

## அதிமுக பொதுக்குழு தீர்மானங்களையும், பொதுச் செயலாளர் தேர்தலையும் எதிர்த்து ஓ.பன்னீர்செல்வம் அணி தரப்பில் தாக்கல் செய்த மேல் முறையீட்டு மனுக்கள் மீண்டும் விசாரணைக்கு வந்தன.

**சென்னை, ஜூன். 9-**

**ஒற்றைத் தலைமையை மீண்டும் கொண்டு வந்ததன் மூலம் கட்சியின் பழைய நிலை மீட்டெடுக்கப் பட்டுள்ளது. நிர்வாகிகளை நியமித்து இணையாக கட்சி நடத்தும் நபர், பதவிப் பசி காரணமாகவே வழக்கு தொடர்ந்துள்ளதாக அதிமுகதரப்பில்சென்னை உயர் நீதிமன்றத்தில் வாதிடப்பட்டுள்ளது.**



அதிமுக பொதுக்குழு தீர்மானங்களையும், பொதுச் செயலாளர் தேர்தலையும் எதிர்த்து ஓ.பன்னீர்செல்வம் அணி தரப்பில் தாக்கல் செய்த மேல் முறையீட்டு மனுக்கள், நீதிபதிகள் மகாதேவன் மற்றும் முகமது சபீக் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு ஒரு மாத இடைவெளிக்கு பின் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தன.

அப்போது, அதிமுக மற்றும் எடப்பாடி பழனிச்சாமி தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் சி.எஸ். வைத்தியநாதன், "கட்சி விதிப்படி, கட்சி விவகாரங்கள் தொடர்பாக பொதுக்குழு எடுக்கும் முடிவுகளே இறுதியானது. கட்சியின் அனைத்து முடிவுகளையும் அடிப்படை தொண்டர்களிடம் கேட்டு எடுக்க முடியாது. கட்சியின் கொள்கை உள்ளிட்ட விவகாரங்களை மட்டுமே பொதுக்குழு தீர்மானிக்க முடியும் என்றில்லை. ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் பொதுக்குழுவுக்கு அதிகாரம் உள்ளது.

கட்சியின் உறுப்பினர் முதல் நிர்வாகிகள் வரை கட்சி விதிகளுக்கு கட்டுப்பட்டவர்கள். கட்சியின் விதிகளுக்கு மேலானவர்கள் யாரும் இல்லை. கட்சி விதிகளை மீறினால் ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க முடியும். ஒழுங்கு நடவடிக்கை எடுக்க ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளருக்கு மட்டுமே அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது என்று கூறினாலும், அவர்களைவிட உச்சபட்ச அதிகாரம் கொண்டது பொதுக்குழு.

கட்சியில் இருந்து நீக்கப்பட்டதால் எம்எல்ஏவாக செயல்படுவது மனுதாரர்களுக்கு எப்படி பாதிப்பை ஏற்படுத்தியது என்பது குறித்து விளக்கப்படவில்லை. மாநிலம் முழுவதும் தனியாக நிர்வாகிகளை நியமித்து வரும் ஓபிஎஸ் எப்படி கட்சியில் இருந்து நீக்கியதை எதிர்த்து நிவாரணம் கோர முடியும் எனத் தெரியவில்லை. மேலும், ஒன்றரை கோடி உறுப்பினர்கள் கொண்ட கட்சியில் 2500 பேர் கொண்ட பொதுக்குழு எப்படி ஒற்றைத் தலைமை குறித்து முடிவெடுக்கலாம் என்று சென்னை உயர் நீதிமன்ற தனி நீதிபதி தெரிவித்த கருத்துக்களை, உயர் நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் அமர்வும், உச்ச நீதிமன்றமும் நிராகரித்து விட்டது.

கட்சி செயல்பாடு முடங்கி விட்டது என்ற வாதம் கற்பனையானதல்ல; உச்ச நீதிமன்றமே அதை ஏற்றுக் கொண்டுள்ளது. பொதுக்குழு உறுப்பினர்கள் அடிப்படை உறுப்பினர்களால் தான் தேர்வு செய்யப்படுகின்றனர். அடிப்படை உறுப்பினர்களின் பிரதிநிதிகளாகவே பொதுக்குழு உறுப்பினர்கள் செயல்படுகின்றனர். ஒற்றைத் தலைமை கட்சி விதிகளுக்கு எதிராக இல்லை. கட்சியின் அடிப்படை விதிகளை மீறியதாக கூறப்படும் குற்றச்சாட்டு தவறானது.

கட்சி செயல்பாடு தொடர்ந்து முடங்க வேண்டும் என்ற அடிப்படையிலேயே இந்த வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஒருங்கிணைப்பாளர் நியமனத்துக்கு பொதுக்குழு ஒப்புதல் அளிக்காததால் ஓபிஎஸ் எந்த உரிமையும் கோர முடியாது. ஒற்றைத் தலைமையை மீண்டும் கொண்டு வந்ததன் மூலம் கட்சியின் பழைய நிலை மீட்டெடுக்கப் பட்டுள்ளது. கட்சி விதிகளின்படியே, விதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. எனவே, அதில் எந்த தவறும் இல்லை.

பன்னீர்செல்வம் ஒரு காலத்தில் தலைவராக, முதல்வராக இருந்திருக்கலாம். தலைவர்கள் வரலாம், போகலாம். மக்களின் விருப்பப்படிதான் கட்சி தொடர வேண்டும். அனைத்து நடவடிக்கைகளும் கட்சி நலன்கருதியே எடுக்கப்பட்டன. நிர்வாகிகளை நியமித்து இணையாக கட்சி நடத்தும் நபர், பதவிப்பசி காரணமாகவே இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறார்" என்று வாதிட்டார். இதைத்தொடர்ந்து எடப்பாடி பழனிச்சாமி தரப்பு வாதங்களுக்காக வழக்கு இன்றைக்கு ஒத்திவைக்கப்பட்டது.



சென்னை, கிண்டி, கிங் நோய் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் 230 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் ஆறு மேல் தளங்களுடன் மொத்தம் 6 இலட்சம் சதுர அடி பரப்பளவில் உலக தரத்தில் அதிநவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள 1000 படுக்கை வசதிகளுடன் கூடிய கலைஞர் நூற்றாண்டு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை திறக்கப்படவுள்ள நிலையில் நேற்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பார்வையிட்டார். பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்ரமணியன், துணை மேயர் மகேஷ் குமார், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், மற்றும் பொதுப்பணித்துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாட்டில் கேலோ இந்தியா இளையோர் விளையாட்டு-2023 போட்டிகள் நடத்துவது தொடர்பாக இந்திய விளையாட்டு ஆணைய அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுத் துறை அலுவலர்களுடன் தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று சென்னை முகாம் அலுவலகத்தில் ஆலோசனை மேற்கொண்டார். இந்த கூட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமை செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, இந்திய விளையாட்டு ஆணைய (SAI) துணை இயக்குநர் (பொது) எக்டா விஷ்னாய், (Ms. Esta Vishnoi, Deputy Director General ) மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பொறியியல் படிப்புகளில் சேர 1,87,693 விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளன அமைச்சர் பொன்முடி தகவல்

**சென்னை, ஜூன். 9-**

"பொறியியல் படிப்புகளில் சேர இந்த ஆண்டு 1 லட்சத்து 87 ஆயிரத்து 693 விண்ணப்பங்கள் வந்துள்ளன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது 18 ஆயிரத்து 610 விண்ணப்பங்கள் அதிகரித்திருக்கின்றன" என்று தமிழக உயர் கல்வித்துறை அமைச்சர் பொன்முடி கூறியுள்ளார்.



சென்னையில் உயர் கல்வித் துறை அமைச்சர் பொன்முடி நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியது: "பொறியியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பிப்பதற்கான தேதி 4.6.2023 அன்று முடிவடைந்தது. இந்த ஆண்டு 1 லட்சத்து 87 ஆயிரத்து 693 விண்ணப்பங்கள் வந்துள்ளன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது 18 ஆயிரத்து 610 விண்ணப்பங்கள் அதிகரித்திருக்கின்றன.

நான் முதல்வன் திட்டத்தின் மூலம் தமிழக முதல்வர் எடுத்துள்ள நடவடிக்கைகளின் காரணமாக, பொறியியல் கல்லூரிகள் தொழிற்சாலைகளுடன் தொடர்புகொண்டு, கல்வி முறைகளை எல்லாம் மாற்றியிருக்கிறோம். இந்த நடவடிக்கைகளை மேலும் அதிகரிக்க வேண்டும் என்று முதல்வர் கூறியிருக்கிறார். அதன் அடிப்படையில்தான், இன்று பொறியியல் படிப்புகளில் சேரும் மாணவர்களின் விண்ணப்பங்களும் அதிகரித்திருக்கிறது.

தமிழக முதல்வர் அறிவித்த, அரசுப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கான 7.5 சதவீத இடஒதுக்கீடு, சென்ற ஆண்டைவிட, இந்தாண்டு 7,852 மாணவர்கள் அதிகமாக விண்ணப்பித்துள்ளனர். கடந்த ஆண்டு மாற்றுத்திறனாளிகள் 217 பேர் விண்ணப்பித்திருந்த நிலையில், இந்தாண்டு 394 விண்ணப்பங்கள் வந்துள்ளன. விளையாட்டு வீரர்கள் என்ற அடிப்படையில், கடந்த ஆண்டு 3081 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இந்த ஆண்டு 5,024 விண்ணப்பங்கள் பெறப்பட்டிருக்கின்றன.

முன்னாள் படைவீரர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களின் வாரிசுகள் கடந்த ஆண்டு 1084 மட்டுமே வந்திருந்தது. இந்த ஆண்டு 1,615 விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன" என்று அவர் கூறினார்.

## ஆலங்குடி கறம்பக்குடி பகுதிகளில் சூறைக்காற்றால் வாழை உள்ளிட்ட பயிர்கள் சேதம்: நிவாரணம் வழங்க விவசாயிகள் கோரிக்கை





**ஆலங்குடி, ஜூன். 9-**

ஆலங்குடி கறம்பக்குடி பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு வீசிய சூறைக்காற்றால் வாழை, நெல், சோளம் உள்ளிட்ட பயிர்கள் சேதம் அடைந்தன. உரிய இழப்பீடு வழங்க விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி கறம்பக்குடி தாலுகாவில் கடந்த சில வாரங்களாக வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு பலத்த சூறைக்காற்றுடன் மழை பெய்தது. வாணக்கன்காடு, கருக்காக்குறிச்சி, வடகாடு, புள்ளான்விடுதி, மழையூர், வெட்டன்விடுதி உள்ளிட்ட பகுதிகளில் காற்று சுழன்று அடித்ததில் வாழை மரங்கள் முறிந்து விழுந்தன. நெல், சோளம் உள்ளிட்ட பயிர்கள் முற்றிலும் சேதம் அடைந்தன. இதனால் விவசாயிகள் பெரும் சோகத்துடன் உள்ளனர்.

இதுகுறித்து மழையூரைச் சேர்ந்த வாழை விவசாயி மதியழகன் கூறியதாவது, தற்போது உள்ள சூழ்நிலையில் கடும் சிரமத்துடன் விவசாயம் செய்து வருகிறோம். கடந்த 2018ம் ஆண்டு வீசிய கஜா புயலில் வாழைமரம் முற்றிலும் சேதம் அடைந்தது.


அதனை அடுத்து கொரோனா காலங்களில் வாழைப்பழங்களை விற்பனை செய்ய முடியாமல் தோட்டத்திலேயே பழுத்து வீணாகிப் போனது. அதிலிருந்து மீண்டு தற்போது வாழை மரங்களை மிகுந்த சிரமத்தோடு பயிரிட்டு பராமரித்து வந்தோம். ஒரு வாழைமரம் செலவு 200 ஆகிறது. அதற்கு கம்பு கட்டி பாதுகாப்பு செய்து வந்த சூழ்நிலையில் நேற்று முன்தினம் இரவு வீசிய திடீர் சூறைக்காற்றால் அனைத்து வாழை மரங்களும் முற்றிலும் சேதம் அடைந்தது. அதனால் நாங்கள் செலவு செய்த பணமும், எங்களது வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது. இது குறித்து அதிகாரிகள் ஆய்வு செய்து எங்களுக்கு உரிய நிவாரணம் தர அரசை கேட்டுக்கொள்கிறோம் எனக் கூறினார்.

வாணக்கன்காடு, கருக்காகுறிச்சி உள்ளிட்ட பகுதிகளில் வாழைமரங்கள் பாதிப்படைந்துள்ளதை பார்வையிட்ட சுற்றுசூழல் துறை அமைச்சர் மெய்யநாதன் விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என கூறினார்.




புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஒன்றியம், சிலட்டூர் ஊராட்சி, சின்னக்குரும்பி கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ், மயான வரத்து வாரி வெட்டுதல் பணியினை மாவட்ட கலெக்டர் மெர்சி ரம்யா நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் கவித பிரியா, மாவட்ட ஊரக வளர்ச்சிதுறை செயற்பொறியாளர் பாலகிருஷ்ணன் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# நிவாரணத் தொகை பெறுவதற்காக நாடகமாடிய பெண் ஒடிசா ரெயில் விபத்தில் கணவர் இறந்ததாக பொய் புகார்

புவனேஸ்வர் ஜுன் 9

ஒடிசாவின் பாலசோர் எனும் இடத்தில் 3 ரெயில்கள் மோதிக்கொண்ட மிக கோரமான விபத்தில் 278 பேர் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு ஒடிசா முதல்வர் நவீன் பட்னாயக் ரூ. 5 லட்சமும், பிரதமர் ரூ. 2 லட்சமும், ரெயில்வே அமைச்சகம் ரூ.10 லட்சமும் நிவாரணம் அறிவித்துள்ளனர். விபத்திற்கான காரணத்தை கண்டறிய சி.பி.ஐ. ஈடுபட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. ரெயில் விபத்தில் இறந்தவர்களின் பெயரில் போலியாக வரும் நிவாரண கோரிக்கைகளை கண்டறிந்து அவற்றை கோருபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஒடிசா தலைமை செயலாளர் ஜெனா இந்திய ரெயில்வே, ஒடிசா போலீசாருக்கு அறிவுறுத்தியுள்ளார். இதற்கிடையே, இந்த நிவாரணத்தை பெறுவதற்காக தன் கணவர் என வேறு ஒருவரின் சடலத்தை அடையாளம் காட்டிய பெண், போலீசாரால் தேடப்பட்டு வருகிறார்.

ஒடிசாவின் கட்டாக் மாவட்டத்தின் மனியாபந்தா எனும் இடத்தைச் சேர்ந்தவர் கீதாஞ்சலி தத்தா. இவரது கணவர் பிஜய் தத்தா. ஒடிசாவில் நடந்த ரெயில் விபத்தில் கீதாஞ்சலி தத்தா, தன் கணவரான பிஜய் தத்தா உயிரிழந்ததாக கூறி, இறந்தவர்களின் சடலங்களில் கணவரது உடல் என ஒரு சடலத்தை அடையாளம் காட்டினார். அவர் சமர்ப்பித்த ஆவணங்களை சரிபார்த்தபோது, அவை போலியானவை என தெரியவந்தது. இதையடுத்து, அதிகாரிகள் அவரை எச்சரித்து அனுப்பி வைத்தனர். கடந்த 13 வருடங்களாக கணவன், மனைவி இருவரும் பிரிந்து வாழ்வதாக போலீசார் தெரிவித்தனர். இந்நிலையில், அந்த பெண்மணியின் கணவர் பிஜய் தத்தா, தன் மனைவியின் மீது போலீசில் புகார் அளித்தார். அந்தப் புகாரில் பொது பணத்தை அபகரிக்க முயற்சி செய்ததற்காகவும், உயிரோடு உள்ள தன்னை ரெயில் விபத்தில் மரணம் அடைந்ததாக கூறியதற்காகவும் கீதாஞ்சலி மீது கடும் நடவடிக்கை எடுக்கும்படி கூறியுள்ளார். காவல்துறையின் கைது நடவடிக்கைக்கு பயந்து கீதாஞ்சலி தலைமறைவாகியுள்ளார்.

# உளுந்தூர்பேட்டையில் கருணாநிதியின் 100 வது பிறந்தநாளையொட்டி நெடுஞ்சாலைதுறை சார்பில் மரக்கன்றுகள் நடப்பட்டன



கள்ளக்குறிச்சி, ஜுன்,09_

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டையில் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் நூறாவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, நெடுஞ்சாலை துறை சார்பில் உளுந்தூர்பேட்டையில் இருந்து திருவெண்ணெய்நல்லூர் செல்லும் சாலையில் மரக்கன்றுகள் நடும் விழா நடைபெற்றன.

இவ்விழாவில் நெடுஞ்சாலைத்துறை கள்ளக்குறிச்சி கோட்ட பொறியாளர் முரளி, உளுந்தூர்பேட்டை உதவி கோட்ட பொறியாளர் சிவக்குமார் ஆகியோரின் முன்னிலையில் உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் மணிக்கண்ணன் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நட்டு வைத்தார், தொடர்ந்து நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் மற்றும் சாலை பணியாளர்களிடம் மரக்கன்றுகளுக்கு தவறாமல் தண்ணீர் ஊற்றி பாதுகாப்பாக வளர செய்யுமாறு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் திருநாவலூர் ஒன்றிய குழு தலைவர் சாந்தி இளங்கோவன், நெடுஞ்சாலை துறை தொழில்நுட்ப உதவியாளர் சந்தானகிருஷ்ணன், திறன்மிகு உதவியாளர்கள் கோதண்டபாணி, ரேவதி, தையல்நாயகி, மஞ்சுளா மற்றும் சாலை பணியாளர்கள் உடனிருந்தனர்..




# அரியலூர் வட்டார வளர்ச்சி அலுவலராக முத்துக்குமார் பொறுப்பேற்பு




அரியலூர் ஜுன் 9

அரியலூர் வட்டார வளர்ச்சி அலுவலராக, முத்துக்குமார் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அரியலூர் மாவட்டம், செந்துறை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், துணை வட்டார வளர்ச்சி அலுவலராக பணியாற்றிய முத்துக்குமார், பதவி உயர்வு பெற்று, அரியலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வட்டார வளர்ச்சி அலுவலராக பொறுப்பேற்றுக் கொண்டார்.

புதிய வட்டார வளர்ச்சி அலுவலராக பொறுப்பேற்றுக் கொண்ட முத்துக்குமாருக்கு, அலுவலகமேலாளர் ஆனந்தன், உள்ளிட்ட பலரும் வரவேற்று வாழ்த்து தெரிவித்தனர்.

# பொன்பரப்பி ஸ்ரீ செல்வ விநாயகர் கோயில் கும்பாபிஷேக விழா




அரியலூர் ஜுன் 9

பொன்பரப்பி ஸ்ரீ செல்வ விநாயகர் கோயில் கும்பாபிஷேக விழா நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், செந்துறை தாலுக்கா, பொன்பரப்பி வடக்கு புதுத்தெருவில் வசிக்கும், செங்குந்த சமூக மக்கள் சார்பாக, புதிதாக புனரமைக்கப்பட்ட, ஸ்ரீ செல்வ விநாயகர் கோயில் கும்பாபிஷேகம், யாகசாலை பூஜைகளுடன் துவங்கி, கோலாகலமாக நடைபெற்றது.

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி, குமரகுரு சிவாச்சாரியார் தலைமையிலான வேத விற்பனர்கள், தமிழ் முறைப்படி நடத்திய இந்த கும்பாபிஷேக விழாவில், கிராம நாட்டாமை ரவி, இளங்கோவன், கோவில் திருப்பணி குழு தலைவர் ரவீந்திரன், அரியலூர் புலவர் இளங்கோ, அரியலூரை சேர்ந்த வழக்கறிஞர் ராஜேந்திரன், ஓய்வு பெற்ற அரசு சிமெண்ட் ஆலை அலுவலர் சுப்பிரமணியன், பொறியாளர் செல்வராஜ், பொன்பரப்பி சிதம்பரம் ஆசிரியர், பொன்னம்பலம் மற்றும், ஏராளமான பக்த பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# கடன்பட்டது 100 ரூபாய் 30 ஆண்டுக்கு பிறகு 10 ஆயிரம் ரூபாயாக திருப்பி கொடுத்த ஆசிரியர்



திருவனந்தபுரம் ஜுன் 9

கேரள மாநிலம் கோழஞ்சேரியை சேர்ந்தவர் பாபு (வயது 62). இவர் அந்த பகுதியில் ஆட்டோ ஓட்டி வருகிறார். இந்தநிலையில் 53 வயது மதிக்கத்தக்க ஒருவர் பாபுவை சந்தித்தார். அப்போது அவர் ஒரு கவரை பாபுவிடம் கொடுத்தார். அதை பிரித்துப்பார்த்த பாபு அதிர்ச்சி அடைந்தார். அதில் பல ரூபாய் நோட்டுகள் இருந்தன. எதிரில் நின்ற நபர் என் பயண கடன் அதைத்தான் தற்போது தீர்க்க வந்துள்ளேன் என்று கூறி புதிர்போட்டார். எதுவும் புரியாமல் விழிபிதுங்கி நின்ற பாபுவிடம் உங்கள் கையில் 10 ஆயிரம் ரூபாய் இருக்கிறது. அது உங்களுக்குத்தான் வைத்துக்கொள்ளுங்கள் என்று அந்த நபர் கூறினார்.

மேலும், அவர் தான் திருவனந்தபுரத்தில் ஆசிரியராக பணிபுரிந்து வருவதாகவும், தனது பெயர் அஜித் என்றும் அறிமுகப்படுத்திக்கொண்டார். அதன்பிறகு அந்த பணத்தை கொடுத்ததற்கான காரணத்தை தெரிவித்தார். கடந்த 1993-ம் ஆண்டு நான் சங்கனாச்சேரியில் பி.எட். படித்துக்கொண்டு இருந்தேன். அப்போது மங்கலத்துநடையில் உள்ள எனது நண்பர் வீட்டிற்கு சென்றுவிட்டு மூவாற்றுப்புழா செல்ல பஸ்சிற்காக காத்து நின்றேன். பஸ் வராததால் ஆட்டோவில் செல்ல முடிவு செய்தேன். ஆனால் என்னிடம் பஸ்சில் செல்வதற்கான பணம் மட்டுமே கையில் இருந்தது. அப்போது ஆட்டோ டிரைவரிடம் ரூ.100 பிறகு தருவதாக கூறி வீட்டிற்கு சென்றேன். இடைப்பட்ட காலத்தில் பலமுறை உங்களை சந்தித்து ஆட்டோ கட்டணத்தை கொடுக்க முயன்றேன். ஆனால், முடியவில்லை. வாய் வார்த்தை என்றாலும் கூட அதுவும் கடன்தானே.

இப்போது ரூ.100 பெரிய தொகையல்ல. அந்த காலத்தில் அது பெரிய தொகை. என் மீது நம்பிக்கை வைத்து ஆட்டோவில் பயணம் செய்ய அனுமதித்தீர்கள். தற்போது 30 ஆண்டுகள் கடந்து விட்டது. தங்களை சந்திக்கும் வாய்ப்பு இப்போதுதான் கிடைத்தது. ஆதலால் ரூ.100-க்கு பதிலாக ரூ.10 ஆயிரம் தந்துள்ளேன். இவ்வாறு அவர் தெரிவித்தார். அப்போதுதான் பாபுவிற்கும் அந்த பழைய சம்பவம் நினைவுக்கு வந்தது. ஆனால் அந்த பணத்தை ஏற்றுக்கொள்ள பாபு மறுத்தார். அதே நேரம் விடாப்பிடியாக அன்புடன் அந்த பணத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அஜித் கூறினார். ரூ.100 கடனை 30 ஆண்டுகள் கடந்தும் நேர்மையுடன் ரூ.10 ஆயிரமாக ஆசிரியர் திருப்பி கொடுத்தது நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது. தற்போது இந்த சம்பவம் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.



தென்காசி காசி விஸ்வநாதர் ஆலயம் அருகில் உள்ள திருவள்ளுவர் கழக 96 வது ஆண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற முதல் நாள் நிகழ்ச்சியில் டெல்லி உச்ச நீதிமன்ற நீதிபதி ராமசுப்ரமணியன் தென்காசியில் பல சமூக சேவைகள் செய்து வரும் சாஸ்தாவிற்கு குரல் நெறியாளர் என்ற விருதினை அவரது மனைவியிடம் வழங்கி கௌரவித்தார். இந்நிகழ்ச்சியில் திருவள்ளுவர் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# அறந்தாங்கி அருகே கோலாகலமாக நடைபெற்றது காரக்கோட்டை ஸ்ரீமுத்துமாரியம்மன் திருக்கோயில் மஹா கும்பாபிஷேக விழா



அறந்தாங்கி,ஜுன்.9-

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே காரக்கோட்டை கிராமத்தில் புகழ்பெற்ற ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோயில் உள்ளது, இக்கோயில் கும்பாபிஷேகம் செய்வதென அப்பகுதி கிராமத்தார்களால் முடிவு செய்யப்பட்டு கோவில் புனரமைப்பு பணிகள் நடைபெற்று முடிந்தது. கும்பாபிஷேகத்திற்காக கடந்த 5 ஆம் தேதி முதல் கால யாகபூஜை கணபதி ஹோமத்துடன் தொடங்கி நடைபெற்று வந்த நிலையில் நான்கு கால யாக பூஜைகள் நிறைவுபெற்று தொடர்ந்து கடம்புறப்பாடு நிகழ்வு நடைபெற்றது.

கடம் புறப்பாடானது கோவிலைச் சுற்றி வலம் வந்த பின்னர் கோபுர கலசத்தை அடைந்தது , திருப்பெருந்துறை காளீஸ்வர சாஸ்திரி தலைமையிலான சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இந்த கும்பாபிஷேகத்தில் காரக்கோட்டை, சிங்கவனம்,திருவாப்பாடி,நாகுடி,கட்டுமாவடி, தினையாகுடி உள்ளிட்ட சுற்றுவட்டார பக்தர்கள் ஆன்மீக மெய்யன்பர்கள் பொதுமக்கள் திரளானோர் கலந்து கொண்டு கோபுர தரிசனம் செய்தனர். கும்பாபிஷேக நிகழ்ச்சிக்கு பிறகு ஸ்ரீ முத்துமாரியம்மனுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது

கும்பாபிஷேக நிகழ்ச்சிகள் கலந்து கொண்ட பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது, முன்னதாக கும்பாபிஷேக நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பித்த அனைவருக்கும் கோவில் நிர்வாகத்தின் சார்பில் சால்வை அணிவித்து கௌரவிக்கப்பட்டது, மணமேல்குடி போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

# கட்டாயம் ஹிஜாப் அணியனும் சிக்கலில் பள்ளி நிர்வாகம் போலீஸ் வழக்குப்பதிவு



மத்தியபிரதேசம் ஜுன் 9

பள்ளிக்குள் மாணவர்களை ஹிஜாப் அணிய கட்டாயப்படுத்திய பள்ளி நிர்வாகம் சிக்கலில் சிக்கியது. இந்த விவகாரம் தொடர்பாக பள்ளி நிர்வாகத்தை சேர்ந்த 11 பேர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். சம்பந்தப்பட்ட பள்ளியில் 8-ம் வகுப்பு பயின்று வரும் இரண்டு மாணவிகள், பள்ளி நிர்வாகம் தங்களை ஹிஜாப் அணிய கட்டாயப்படுத்தியது என குற்றம்சாட்டியுள்ளனர். மேலும் அவர்கள் கையில் கட்டியிருந்த கயிறு மற்றும் நெற்றியில் வைத்திருந்த பொட்டு ஆகியவற்றை எடுக்குமாறு பள்ளி நிர்வாகத்தினர் வலியுறுத்தியதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர். பள்ளியில் இறைவணக்க கூட்டத்தில் இஸ்லாமிய பாடல்களை பாட வைத்ததாக குற்றம்சாட்டியுள்ளனர். மத்திய பிரதேச மாநில தலைநகர் போபாலில் இருந்து சுமார் 250 கிலோ மீட்டர்கள் தொலைவில் அமைந்துள்ள தாமோ மாவட்டத்தை சேர்ந்த கங்கா ஜமுனா உயர்நிலை பள்ளியில் இந்த சம்பவம் நடந்தது.

பள்ளி நிர்வாகத்தை சேர்ந்தவர்களில் ஒன்பது பேர் இஸ்லாமியர்கள், இருவர் வேறு மதத்தை சேர்ந்தவர்கள் ஆவர். ஹிஜாப் அணிய கட்டாயப்படுத்தியவர்கள் மீது ஐ.பி.சி. 295 மற்றும் 506 பிரிவுகளின் கீழ் தாமோ கோட்வாலி காவல் துறையினர் வழக்குப்பதிவு செய்துள்ளனர். முன்னதாக பள்ளிக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய உத்தரவிட்டுள்ளதாக மத்தியபிரதேச மாநிலத்தின் உள்துறை அமைச்சர் நரோட்டம் மிஸ்ரா செய்தியாளர்களிடம் தெரிவித்து இருந்தார். முஸ்லீம் அல்லாத மதத்தை சேர்ந்தவர்களை ஹிஜாப் அணிய வலியுறுத்தும் விவகாரத்தில் தற்போது சர்ச்சையில் சிக்கியிருக்கும் கங்கா ஜமுனா பள்ளி ஏற்கனவே சர்ச்சையில் சிக்கியிருந்தது குறிப்பிடத்தக்கது. இந்தவரிசையில்தான் இந்த பள்ளி நிர்வாகத்தினர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

# ஆதனக்கோட்டை அருகே வீரடிவிநாயகர் ஆலயத்தில் சங்கடகர சதுர்த்தி விழா



ஆதனக்கோட்டை, மே.9-

புதுக்கோட்டை மாவட்டம் ஆதனக்கோட்டை அருகே உள்ள குப்பையன்பட்டி கிராமத்தில் எழுந்தருளி அருள்பாலித்து வரும் பிரசித்தி பெற்ற ஸ்ரீ வீரடிவிநாயகர் ஆலயத்தில் மஹா சங்கடகர சதுர்த்தி விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. இந்த விழாவில் விநாயகருக்கு சந்தனாதி தைல அபிஷேகம், திரவியபொடி அபிஷேகம், பாலபிஷேகம், தயிரபிஷேகம், அரிசிமாவு அபிஷேகம், பஞ்சாமிர்த அபிஷேகம், சந்தன அபிஷேகம், இளநீர் அபிஷேகம், பன்னீர் அபிஷேகம் உள்ளிட்ட ஒன்பது வகையான அபிஷேகங்கள் நடைபெற்றது.

பின்னர் விநாயகர் அலங்கரிக்கப்பட்டு தீபாராதனை காட்டப்பட்டு பக்தர்களுக்கு அருள்பாலித்தார், இந்த சங்கடஹர சதுர்த்தி விழாவில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு வீரடி விநாயகரை தரிசனம் செய்தனர், பின்னர் பக்தர்களுக்கு பிரசாதமும் அன்னதானமும் வழங்கப்பட்டது.

## முதல்வர் காணொளி மூலம்

# கடலூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் தொழில் 4.0 திட்டம் தொடங்கி வைத்தார்



கடலூர்,ஜுன்,9

தமிழக நிதிநிலை அறிக்கையில் 2021-2022-ல் தொழிற்பயிற்சி நிலையங்களில் இளைஞர்களுக்கு நவீன தரத்தை, உயர் உற்பத்தி தொழில் நுட்பங்கள் மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கிட தொழில் 4.0 எனும் திட்டம் தொடங்கப்பட்டது.

இந்தத்திட்டத்தின் மூலம் கடலூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 10,500 சதுர அடி பரப்பளவில் பணிமனை கட்டடம் ரூ.3.73 கோடி மதிப்பில் கட்டப்பட்டது. மேலும், திட்டத்தின் கீழ் 5 நவீன பயிற்சிகள் நடத்தப்பட உள்ளது.

இந்த பயிற்சியினை வழங்கிட ரூ.31 கோடி செலவில் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. பயிற்சியின் மூலம் ஆண்டொன்றுக்கு 152 மாணவ மாணவிகள் பயன்பெறுவர். பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு முன்னணி தொழில் நிறுவனங்களில் எளிதில் வேலை வாய்ப்பு கிடைக்கும்.

இதன் தொடக்க விழா கடலூர் அரசு தொழில் பயிற்சி நிலையத்தில் நேற்று நடைபெற்றது. தமிழக முதல்வர் சென்னையில் இருந்து காணொளி காட்சி மூலம் திறந்து வைத்துப் பேசினார்.

இதைத்தொடர்ந்து நடந்த நிகழ்ச்சிக்கு கடலூர் மாவட்ட ஆட்சியர் அ.அருண் தம்புராஜ் தலைமை வகித்தார். கடலூர் சட்டப்பேரவை உறுப்பினர் கோ.ஐயப்பன் உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் அரசுத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# கலைஞர் நூற்றாண்டு விழா–நெடுஞ்சாலை துறை சார்பில் 6 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் விழா

தரங்கம்பாடி, ஜுன். 9-

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி வட்டம் பொறையாரில் கலைஞர் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நெடுஞ்சாலைத்துறை சார்பில் 6 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் பணி நடைபெற்றது.



விழாவிற்கு திமுக ஒன்றிய செயலாளர் எம்.அப்துல்மாலிக், நெடுஞ்சாலை துறை கோட்ட பொறியாளர் எஸ். பாலசுப்பிரமணியன் தலைமை தாங்கினார், பேரூராட்சி மன்ற தலைவர் சுகுணசங்கரி குமரவேல், உதவி கோட்ட பொறியாளர் ஜி. இந்திரன், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் பொன். ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மறைந்த தமிழக முன்னாள் முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு சென்னையில் புதன்கிழமை தமிழ்நாடு முழுவதும் மரக்கன்றுகள் நடும் பணியை முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து நெடுஞ்சாலைத்துறை சார்பில் மயிலாடுதுறை மாவட்டம் முழுவதும் 6 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் பணியை தரங்கம்பாடி பேரூராட்சிக்குட்பட்ட பொறையார், ராஜீவ் காந்தி சிலை அருகில் தரங்கம்பாடி -ஆடுதுறை நெடுஞ்சாலையில் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும், மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம். முருகன் வியாழக்கிழமை மரக்கன்றுகளை நட்டு தொடங்கி வைத்தார்.

இதில் தரங்கம்பாடி பேரூர் திமுக அவைத்தலைவர் கந்தசாமி, பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் அலமேலு சடகோபன், ஜோன் பெட்ரிக் செல்லப்பா, செந்தாமரை செல்வி ரமேஷ், திமுக மாவட்ட பிரதிநிதி கே.பி. ராஜா உள்ளிட்ட திமுக பொறுப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



புதுச்சேரி மாநிலம் காரைக்காலிலுள்ள பிரசித்தி பெற்ற காரைக்காலம்மையார் கோவிலில், காரைக்கால் அம்மையாரின் வாழ்க்கை வரலாற்றை நினைவு கூறும் வகையில் ஆண்டுதோறும் ஒரு மாத காலத்திற்கு மாங்கனித் திருவிழா விமரிசையாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு மாங்கனித் திருவிழா வரும் ஜூன் 30ம் தேதியன்று மாலை மாப்பிள்ளை அழைப்பு நிகழ்ச்சி நடைபெறும். முக்கிய நிகழ்ச்சிகளாக ஜூலை 01ஆம் தேதி காலை திருக்கல்யாணம் நடைபெறுகிறது. ஜூலை 02ம் தேதி சுவாமி வீதியுலா (மாங்கனி இறைத்தல்) நிகழ்ச்சியும் நடைபெறுகின்றன. இதனையொட்டி நேற்று பந்தக்கால் முகூர்த்தம் நடைபெற்றது. முன்னதாக அம்மையாருக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது அதனைத் தொடர்ந்து கலசம் எடுத்துவரப்பட்டு பந்தலுக்கு திரவியங்களுடன் அபிஷேகம் நடைபெற்றது பின்பு மகா தீபாராதனை செய்யப்பட்டது இதில் கோவில் ஆலய அறங்காவலர் குழுவினர் உள்ளிட்ட ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

# திருவொற்றியூர் ஸ்ரீ ஆஞ்சநேயர் பெருமாள் திருக்கோயில் அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா

திருவொற்றியூர், ஜுன்,9

திருவொற்றியூர் எண்ணூர் விரைவு சாலை கடற்கரை பகுதியில் அமைந்துள்ள மிகவும் பழமை வாய்ந்த அருள் கொடுக்கும் ஸ்ரீ ஆஞ்சநேய பெருமாள் கோவில் உள்ளது.



இக்கோவில் புறனமைக்கப்பட்டு கடந்த ஐந்தாம் தேதி திங்கள்கிழமை காலை 9 மணிக்கு கோபூஜை, கணபதி பூஜை ஓமம், நவகிரக ஹோமம், அஷ்டலட்சுமி ஹோமம், திருஷ்டி துர்கா ஹோமம், மகா பூர்ணாஹூதி தீபாராதனை நடைபெற்றது .

அதனை தொடர்ந்து விக்னேஸ்வரர் பிரார்த்தனை வஸ்து சாந்திஹி பிரவேச பலி ஆஞ்சநேயர் மூல மந்த்ரா, திவ்ய ஹோமம் முதல் கால யாக பூஜைகள் மகாபூர்ணா விதியை தீபாரதிணை நடைபெற்றன முதல் கால யாகசாலை பூஜைகள் நிறைவு பெற்றது.

கடந்த இரண்டு நாட்களாக யாக சாலையில் வேத மந்திரங்கள் முழங்க சிவாச்சாரியார்கள் சிறப்பு பூஜைகள் செய்து மூன்று கால பூஜைகள் நடைபெற்றன, இதனையடுத்து நேற்று காலை நான்காம் கால யாகபூஜையில் விக்னேஸ்வர பிரார்த்தனை, நாடி சந்தானம், திவ்ய ஹோமம், மஹாபூர்ணாஹூதி, தீபாராதனை செய்து வேத மந்திரங்கள் நாதஸ்வரம் மேளதாளத்துடன் பூஜைகள் செய்யப்பட்டு சிவாச்சாரியார்கள் கலசத்தை தலையில் சுமந்து கோவிலை சுற்றி வலம் வந்தனர்.

இதைத்தொடர்ந்து காலை 9.30 மணிக்கு கோபுர கலசத்திற்கு சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு புண்ணிய நதிகளில் கொண்டுவரப்பட்ட புனித நீரை மங்கள வாத்தியங்கள் முழங்க கோபுர கலசத்திற்கு புனித நீர் ஊட்டப்பட்டு மஹா கும்பாபிஷேகம் வெகு விமர்சையாக நடைபெற்றது.

இதில் திருவொற்றியூர் எண்ணூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து பொதுமக்கள் மீனவர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். பின்னர் பொது மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது

# தரங்கம்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தில் ஜமாபந்தி நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் பங்கேற்பு

தரங்கம்பாடி, ஜூன். 9-

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் - வருவாய் தீர்வாயம் 1432 ஆம் பசலி வருவாய் தீர்வாய கணக்குகள் மற்றும் கிராம கணக்குகள் (ஜமாபந்தி) மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி கலந்து கொண்டு பொது மக்களிடம் 63 கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.



வருவாய்தீர்வாயத்தில் மயிலாடுதுறைவட்டத்தில் 39 மனுக்களும், சீரகாழி வட்டத்தில்82மனுக்களும், தரங்கம்பாடியில் 63 மனுக்களும், குத்தாலம் வட்டத்தில்38மனுக்களும் ஆக மொத்தம் 4 வட்டங்களிலும் 222 மனுக்கள் பெறப்பட்டு உரிய விசாரனைக்கு பின் தீர்வு காணப்படும். குறிப்பாக இலவச வீட்டுமனைப் பட்டா, முதியோர் ஓய்வூதியம், பட்டா பெயர் மாற்றம், ஆகியவை தொடர்பாக பெருபான்மையான மனுக்கள் பெறப்பட்டுள்ளன என மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி தகவல் தெரிவித்துள்ளார்.

கஞ்சாநகரம், லட்சுமிநாராயணபுரம்-1, மேமலையூர், லட்சுமிநாராணயபுரம்-2, கருவாழக்கரை, கீழையூர், நடுக்கரை மேல்பாதி. நடுக்கரை கீழ்பாதி, கிடாரங்கொண்டான், தலையுடையவர் கோவில்பத்து, மேலபெரும்பள்ளம், கீழபெரும்பள்ளம். ஆகிய வருவாய் கிராமங்களை சேர்ந்த பொது மக்களிடம் கோரிக்கை மனுக்கள் பெறப்பட்ட மனுக்கள் மீது உரிய விசாரணை செய்து ஜமாபந்தியின் நிறைவு நாளில் தீர்வு காணபட்டு ஆணைகள் வழங்கப்படும் என தெரிவித்துள்ளார். தொடர்ந்து வியாழக்கிழமை (8.06.2023) தரங்கம்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தில் செம்பனார்கோவில் உள் வட்டம், மருதம்பள்ளம், காலமநல்லூர். ராமச்சந்திரன் கோவில்பத்து. கிடங்கல். மாமாக்குடி, ஆக்கூர் பண்டாரவாடை, உடையவர்கோவில்பத்து, மடப்புரம். காளஹஸ்தினாபுரம், முடிகண்டநல்லூர், செம்பனார்கோவில் ஆகிய வருவாய் கிராமங்களை சேர்ந்த பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்கள் பெறப்படும். தொடர்ந்து கிராம நிர்வாக அலுவலர்களால் பராமரிக்கப்படும் அ பதிவேடு, அ பதிவேட்டின் உள்ளடக்கம், பயிராய்வு கணக்கு. அடங்கல், மரப்பதிவேடு. பட்டா மாறுதல், பல்வகை வருவாய், கிராம வரி வசூல் கணக்கு, பட்டா வாரியான வசூல் பதிவேடு. நிலவருவாய் ரசீது, பிறப்பு இறப்பு பதிவேடு மழை பொழிவு பதிவேடு. கிராமபுள்ளியல் பதிவேடு போன்ற பதிவேடுகள் முறையாக பராமரிக்கப்படுகின்றவா என ஆய்வு செய்யப்படுகின்றன என மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

வருவாய்தீர்வாயத்தில் வட்ட வழங்கல் அலுவலகத்திற்கு 2 மனுக்களும், வட்டாட்சியர் அலுவலகத்திற்கு 13 மனுக்களும், நில அளவை பிரிவிற்கு 8 மனுக்களும், வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு 3 மனுக்களும், செம்பனார்கோயில் காவல் நிலையத்திற்கு 1 மனுவும், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திற்கு 11 மனுவும், மாவட்ட சமூக நல பாதுகாப்பு திட்ட அலுவலகத்திற்கு 24 மனுக்களும், நில நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு 1 மனுவும், என மொத்தம் 63 கோரிக்கை மனுக்கள் மாவட்ட ஆட்சியர் பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் கோ.அர.நரேந்திரன் (பொது), ஜெயபாலன் (வேளாண்மை), தரங்கம்பாடி வட்டாட்சியர் சரவணன், வருவாய்துறை உள்ளிட்ட அனைத்துத் துறை அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




ஒடிசா ரயில் விபத்தில் உயிரிழந்த நம் சகோதர, சகோதரிகளுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி காரைக்கால் டாக்டர் அம்பேத்கர் கல்வி அகடாமி பயிற்சி அரங்கில் நேற்று நடைபெற்றது. நிகழ்ச்சியில் அகடமின் நிர்வாகியும் கிராம நிர்வாக அதிகாரியுமான மாறன் தலைமையில் நடைபெற்றது. அஞ்சலி நிகழ்ச்சியில் டாக்டர் அம்பேத்கர் கல்வி அகாடமிவில் பயிலும் மாணவ மாணவிகள் கைகளில் மெழுகுவர்த்தி ஏந்தி ரயில் விபத்து புகைப்படம் வைத்து அஞ்சலி செலுத்தினர். இதில் திருநள்ளாறு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சிவா உள்ளிட்ட 5க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து இறந்தவர்களுக்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.



காரைக்கால் மாவட்டம் கோட்டுச்சேரி கொம்யூன் பஞ்சாயத்துக்கு உட்பட்ட திருவேட்டகுடி கோவில்மேடு வடக்குத்தெரு பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூபாய் 5,00,000/- இலட்சம் மதிப்பீட்டில் தார்ச்சாலை அமைப்பதற்கான பூமி பூஜை மற்றும் வரிச்சகுடி ராகவேந்திரா நகர் மற்றும் ராகவாஸ் நகர் பகுதிகளில் 34,000,00 இலட்சம் செலவில் தார் சாலை அமைப்பதற்கான பூமி பூஜை மற்றும் செந்தமிழ் நகர் பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 20,000,00 இலட்சம் செலவில் தார்சாலை அமைக்க பூமி பூஜை ஆக மொத்தம் மூன்று இடங்களில் 59,000,00 இலட்சம் மதிப்பீட்டில் தார் சாலைகள் அமைப்பதற்கான பூமி பூஜையினை போக்குவரத்து துறை அமைச்சர் சந்திர பிரியங்கா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கோட்டுச்சேரி கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் சிவநேசன் மற்றும் கொம்யூன் பஞ்சாயத்து அதிகாரிகள் முக்கிய பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# பிடிப்பட்ட பழைய வாகனங்களை குறைந்த விலையில் வாங்கலாம்' ஏலம் விடும் காவல்துறை

சென்னை,ஜுன்,9

சென்னை காவல்துறை வெளியிட்டுள்ள அறிவிப்பில், சென்னையில் உரிமை கோரப்படாத 260 இருசக்கர வாகனங்கள் ஏலம்விடப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



சென்னையில் பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டு சிக்கும் இருசக்கர வாகனங்கள் போலீசார் பறிமுதல் செய்கின்றனர். அப்படி பறிமுதல் செய்யப்படும் வாகனங்களை போலீசார் அவ்வப்போது ஏலம் விடுவார்கள். அப்படி ஏலம் விடப்படும் வாகனங்கள் குறித்து தான் அறிவிப்பு வெளியாகி உள்ளது. இது தொடர்பாக சென்னை காவல்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"சென்னை பெருநகர காவல் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் உரிமை கோரப்படாத மற்றும் கைவிடப்பட்ட 260 இருசக்கர வாகனங்கள், சென்னை, புதுப்பேட்டை, சென்னை பெருநகர காவல் ஆயுதப்படை மைதானத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இவ்வாகனங்கள் 28.06.2023 அன்று காலை 10.00 மணியளவில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது.

ஏலத்திற்கான முன்பதிவு 14.06.2023 மற்றும் 15.06.2023 ஆகிய நாட்களில் காலை 10 மணி முதல் 14 மணி வரை சென்னை, புதுப்பேட்டை ஆயுதப்படை மைதானத்தில் நடைபெற உள்ளது. அடையாள அட்டை மற்றும் GST பதிவெண் சான்றுடன் வரும் ஏலதாரர்கள் மட்டுமே முன்பதிவு கட்டணம் செலுத்த அனுமதிக்கப்படுவர். 28.06.2023 அன்று காலை 10.00 மணியளவில் முன்பணம் செலுத்தி பதிவுசெய்தஏலதாரர்கள் மற்றும் ஏலக்குழுவினர் முன்னிலையில் ஏலம் நடைபெறும். ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட வாகனங்களுக்கான ஏலத் தொகை மற்றும் GST தொகையினை மறுநாள் முழுவதுமாக செலுத்த வேண்டும்.

# காரைக்கால் மாவட்டத்தில் வட்டாரப் போக்குவரத்து துறை மூலம் கல்வி நிறுவனங்களின் பேருந்து ஆய்வு

காரைக்கால், ஜூன். 9-

காரைக்கால் மாவட்டத்தில் வட்டாரப் போக்குவரத்து துறை மூலம் கல்வி நிறுவனங்களின் பள்ளி மாணவர்கள் பயணிக்கும் கட்டணமில்லா பேருந்தை சென்ற திங்கட்கிழமையிலிருந்து ஆய்வு செய்யும் பணி நடைபெற்று வரும் நிலையில் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் நேற்று வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு சென்று பள்ளி வாகனங்கள் ஆய்வு செய்யும் பணியை பார்வையிட்டார்கள்.



மேலும் ஓட்டுனர்களிடம் பள்ளி மாணவ மாணவிகள் பயணிக்கும் வாகனம் என்பதால் கவனமுடன் செயல்படுமாறும் தங்களுடைய லைசென்ஸ் மற்றும் பேருந்தின் அனைத்து பேப்பர்களும் பேருந்தில் இருக்க வேண்டும் என்றும் ஓட்டுநர்களை கேட்டுக் கொண்டார்கள். மேலும் இது போன்ற பேருந்துகளை அடிக்கடி திடீர் ஆய்வு மேற்கொள்ளப்படும் என்றும் ஆட்சியர் தெரிவித்தார்கள். மேலும் அனைத்து பேருந்துகளிலும் முதலுதவி பெட்டி வைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்ட ஆட்சியர் அவர்கள் பள்ளி பேருந்துகளை இயக்க ஓட்டுநர்களுக்கு குறைந்தது ஐந்து ஆண்டுகள் முன் அனுபவம் இருக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் வட்டாரப் போக்குவரத்து அதிகாரி த அங்காளன் மேலும் ஆய்வாளர் கல்விமாறன் மேல்நிலைக் கல்வித் துணை இயக்குனர் ராஜேஸ்வரி முதன்மை கல்வி அதிகாரி ராஜசேகரன் உள்ளிட்டவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

# திருவொற்றியூரில் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஜமாபந்தி குறை தீர்க்கும் முகாமில் 107மனுக்கள் பெறப்பட்டன

திருவொற்றியூர், ஜுன்,9

திருவொற்றியூர் தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள பொதுமக்கள் கலந்து கொண்ட மக்கள் குறை தீர்க்கும் முகாம் சென்னை திருவொற்றியூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் வருவாய் தீர்வாயம் தணிக்கை எனப்படும் ஜமாபந்தி நிகழ்ச்சி நடைபெற்றது.



ஆர். டி. ஓ. ரங்கராஜன் தலைமையில் 2நாட்கள் நடைபெற்றது. வட்டாட்சியர் நித்தியானந்தம், வருவாய் ஆய்வாளர் மகேந்திரன் மற்றும் வருவாய் துறை அதிகாரிகள் கலந்து கொண்ட முகாமில் பட்டா, ஜாதி சான்றிதழ், இருப்பிட சான்றிதழ், முதியோர் உதவித்தொகை, வருமான வரி கேட்டு 107பேர் மனுக்களை வழக்கினர்.

மனுக்களை பெற்று உடனுக்குடன் மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டது இதனையடுத்து பழங்குடியினர் சான்றிதழ் 5 பேருக்கும் இதர பிற்படுத்தப்பட்டோர் சான்றிதழ் 6 பேருக்கும் 4 பேருக்கு பட்டாவும், ஒருவருக்கு முதியோர் உதவி தொகையும் ஒருவருக்கு வருமான சான்றிதழும் வழங்கப்பட்டது. பழங்குடியினருக்கு சான்றிதழை திருவொற்றியூர் எம். ல். ஏ. கே. பி. சங்கர் மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு ஆகியோர் வழங்கினர். மீதமுள்ள அவர்களுடைய மனுக்கள் மீது 15. நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிகாரிகள்கூறினர்.

நிகழ்ச்சியில் கவுன்சிலர்கள் தீர்த்தி, கோமதி சந்தோஷ், பானுமதி சந்தர் உட்பட பலர் கலந்து கொண்டு தங்கள் பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு பட்டா உள்ளிட்ட அடிப்படை வசதிகள் கேட்டு மனு அளித்தனர்

# 50 ஆண்டுகளாக வாழ்ந்து வந்த வீட்டை இடித்த பஞ்சாயத்து நிர்வாகம் மூன்று பேர் தீக்குளிக்க முயற்சி: தரதரவென இழுத்து சென்று கைது செய்த போலீசார்

காரைக்கால்,ஜுன்,9

காரைக்கால் மாவட்டம் நெடுங்காடு பகுதிக்கு உட்பட்ட அண்டூர் கன்னி கோவில் தெரு பகுதியில் 50 ஆண்டுகளுக்கு முன்பு திடலாக இருந்த பகுதியில் முதன் முதலாக சுப்பிரமணியன் என்பவர் வீடு ஒன்றை கட்டியுள்ளார் அதில் 50 ஆண்டுகளாக தனது மகன்கள் சின்னையன், ரமேஷ், சுரேஷ் ஆகியவுடன் வசித்து வந்துள்ளார்.



கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு பெய்த மழையால் வீடு சேதம் அடைந்து தண்ணீர் கசிய தொடங்கியது. இதனால் பக்கத்தில் வாடகைக்கு குடி பெயர்ந்துள்ளனர் இந்நிலையில் அரசு துறையில் பணிபுரியும் ஆரோக்கிய செல்வி என்பவர் அந்தப் பகுதியில் இலவச மனை பட்டா ஒன்றை விலைக்கு வாங்கியுள்ளார். அவர் வாங்கிய இடத்திற்கு சாலை வேண்டும் என்பதற்காக அப்பகுதியை சேர்ந்த அண்டூர் மதி உடன் அந்த வீட்டின் அருகில் சாலை இருந்ததாக கூறி கொம்யூன் பஞ்சாயத்து நிர்வாகத்திற்கு புகார் அனுப்பி அந்த வீட்டின் அருகில் இருந்த குளியலறை மற்றும் கழிவறை கட்டிடத்தை இடித்துவிட்டு சாலை அமைக்க கோரிக்கை விடுத்திருந்தனர்.

நேற்று திடீரென அப்பகுதிக்கு ஜேசிபி இயந்திரம் மற்றும் போலீசார் உடன் வந்த கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் பாலன் அந்த கட்டிடத்தையும் அருகில் இருந்த கொட்டகையும் இடிக்க முற்பட்டபோது அங்கிருந்த சின்னையன், ரமேஷ், சுரேஷ் ஆகியோர் தலையில் மண்ணெண்ணையை ஊற்றி தீக்குளிக்க முயற்சித்தனர். அப்போது அருகில் இருந்த காவலர்கள் அவர்கள் மீது தண்ணீர் ஊற்றினார். தொடர்ந்து போலீசாருக்கும் இவர்களுக்கும் இடையே கடும் வாக்குவாதம் நிலவியது இதனை அடுத்து மூவரையும் தரதரவென இழுத்து போலீஸ் வேனில் ஏற்றி கைது செய்தனர்.

அதைத் தொடர்ந்து அருகில் இருந்த கழிவறை கட்டிடத்தை ஜேசிபி இயந்திரத்தை கொண்டு இடித்தனர். அப்போது அருகில் இருந்த சின்னையன், ரமேஷ், சுரேஷ் ஆகியவரின் மனைவி குழந்தைகள் கண்ணீர் விட்டு கதறி அழுத சம்பவம் காண்போரை கண் கலங்க வைத்தது. புதுச்சேரி அரசு உடனடியாக இந்த பிரச்சனையில் தலையிட்டு சரியான தீர்வை அளிக்க வேண்டும் என்று அவர்கள் கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்துள்ளனர். ஐந்தாண்டுகளுக்கு மேல் புறம்போக்கு நிலத்தில் இருப்பவர்களுக்கு பட்டாவோ அல்லது இலவச மனை பட்டா வழங்க வேண்டும் என அரசாங்க நடைமுறை உள்ள நிலையில் 50 ஆண்டுகளுக்கு மேலாக வசித்தவரின் வீட்டை திடீரென இடித்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பையும் பதட்டத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

# கந்தர்வக்கோட்டையில் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சார்பில் உலக பெருங்கடல் தின கருத்தரங்கு நடைபெற்றது



கந்தர்வகோட்டை, ஜூன். 09-

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் காட்டுநாவல் கிராமத்தில் உலக பெருங்கடல் தினத்தை முன்னிட்டு நூலகத்தில் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சார்பில் கருத்தரங்கு நடைபெற்றது.

இந்நிகழ்வில் தன்னார்வலர் சுமித்ரா அனைவரையும் வரவேற்றார், தமிழ்நாடு அறிவியல் இயக்க வட்டாரத் தலைவர் ரகமதுல்லா கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசியதாவது, உலகப் பெருங்கடல் தினத்தில் ஒவ்வொரு ஆண்டும், கடல்களை பாதுகாப்பதன் முக்கியத்துவம் மற்றும் கடல் வளங்கள் குறைவதைத் தடுப்பதன் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த உலக பெருங்கடல் தினம் கொண்டாடப்படுகிறது. பெருங்கடல்கள் பூமியின் நுரையீரல் என்று அழைக்கப்படுகின்றன, மேலும் அவை உலக மக்களுக்கு உணவு மற்றும் புரதத்தின் உயர் ஆதாரமாகவும் உள்ளன. இது உலகின் பொருளாதாரத்திற்கும், கடல் சார்ந்த தொழிலில் வாழும் மக்களுக்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பைக் கொண்டுள்ளது. இருப்பினும், நீர் மாசுபாடு மற்றும் மக்களின் அறியாமையால், கடல்கள் அழிந்து வருகின்றன, மேலும் மீன்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. எனவே, சமுத்திரங்களைக் காப்பாற்ற வேண்டிய நேரம் ஆகும் என்றும்,

ஒவ்வொரு ஆண்டும், ஜூன் 8 ஆம் தேதி உலகப் பெருங்கடல் தினம் கொண்டாடப்படுகிறது. இந்நாளில், விஞ்ஞானிகள், செயல்பாடுகள் மற்றும் பிரபலங்கள் ஒன்று கூடி, கடல்களைக் காப்பாற்றுவதன் முக்கியத்துவம் மற்றும் சிறந்ததை உருவாக்க நாம் செய்ய வேண்டிய மாற்றங்களைப் புரிந்துகொள்வதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றனர், என்று பேசினார். மேலும் தன்னார்வலர்கள் சரண்யா, கார்த்திகா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# 300 அடி போர்வெல் குழிக்குள் விழுந்த இரண்டரை வயது குழந்தை – மயங்கிய நிலையில் மீட்டும் உயிரிழந்த பரிதாபம்



போபால், ஜூன்.9-

ஆழ்துளை குழிக்குள் ஆக்சிஜன் செலுத்தப்பட்டு குழந்தையை மீட்கும் முயற்சிகள் நடைபெற்றன. மயங்கிய நிலையில் மீட்ட குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தது.

மத்தியப் பிரதேச மாநிலத்தின் செஹோர் மாவட்டம் முங்காவ்லி கிராமத்தில் 300 அடி ஆழ ஆழ்துளை கிணற்றின் குழிக்குள் இரண்டரை வயது குழந்தை தவறி விழுந்தது. தகவலறிந்து தேசிய பேரிடர் மீட்புப் படையினர் மற்றும் ராணுவத்தினர் மீட்புப் பணியில் ஈடுபட்டனர், பொக்லைன் மற்றும் ஜே.சி.பி. இயந்திரங்களுடன் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து குழந்தையை மீட்கும் முயற்சியில் இறங்கினர். 100 அடி ஆழத்தில் குழந்தை சிக்கி இருந்தது. இரவு, பகல் பாராமல் மீட்பு பணி மேற்கொண்டனர்.

இந்நிலையில், சுமார் 55 மணி நேர போராட்டத்திற்கு பின் அக்குழந்தை மயக்க நிலையில் மீட்கப்பட்டதாக தகவல் வெளியானது. மீட்கப்பட்ட பெண் குழந்தை அங்கிருந்த ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு குழந்தையை பரிசோதித்த டாக்டர்கள் குழந்தை உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர். 300 அடி போர்வெல் குழிக்குள் விழுந்த குழந்தை உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# நீலகிரி மலை ரயிலின் ஒரு பெட்டி தடம் புரண்டதால் பரபரப்பு குன்னூர் –மேட்டுப்பாளையம் ரயில் சேவை ரத்து



குன்னூர், ஜூன். 9-

குன்னூரிலிருந்து மேட்டுப்பாளையம் சென்ற மலை ரயிலின் ஒரு பெட்டி தடம் புரண்டதால் பரபரப்பு ஏற்பட்டது. எனினும், எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. குன்னூர் - மேட்டுப்பாளையம் இடையே ரயில் சேவை ரத்து செய்யப்பட்டது.


கோடை சீசன் காரணமாக நீலகிரி மாவட்டத்துக்கு ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்துள்ளனர். இவர்கள் நீலகிரி மலை ரயிலில் பயணிக்க ஆர்வம் காட்டுகின்றனர். இதனால், மலை ரயிலில் இடம் கிடைப்பது பெரும் சிரமமாக உள்ளது. இந்நிலையில், கோடை சீசன் முடிவடைந்த நிலையிலும், பள்ளிகள் திறப்பு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதால் சுற்றுலா பயணிகள் கூட்டம் குறையவில்லை. நீலகிரிக்கு சுற்றுலா வரும் பலரும் மலை ரயில் பயணிக்கவே ஆர்வம் காட்டுகின்றனர்.

இந்த மலை ரயிலில் புதன்கிழமை தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி குடும்பத்தினருடன் பயணம் செய்து மகிழ்ந்தார். இந்நிலையில், குன்னூரிலிருந்து மேட்டுப்பாளையத்துக்கு நேற்று மதியம் 3 மணியளவில் நீலகிரி மலை ரயில் புறப்பட்டது.

ரயில் குன்னூர் ரயில் நிலையத்திலிருந்து புறப்பட்டு சில மீட்டர் தூரம் சென்றதும் ரயிலின் கடைசி பெட்டி தடம் புரண்டது. இதனால், ரயில் முன் நோக்கி செல்லாமல் நின்றது. ரயிலை நிறுத்திய ரயில்வே ஊழியர்கள், ரயிலை ஆய்வு செய்தபோது, மலை ரயிலின் கடைசிப் பெட்டியின் சக்கரங்கள் தண்டவாளத்தில் இருந்து இறங்கியது தெரியவந்தது. இதனால், குன்னூரிலிருந்து மேட்டுப்பாளையத்துக்கான ரயில் சேவை ரத்து செய்யப்பட்டது.

ரயில் குன்னூர் ரயில் நிலையம் அருகிலேயே தடம் புரண்டதால் அசம்பாவிதங்கள் ஏதும் நடக்கவில்லை. ரயிலில் பயணித்த 175 பேரும் பாதுகாப்பாக இறக்கப்பட்டு, சிறப்பு பேருந்துகள் மூலம் மேட்டுப்பாளையம் அனுப்பி வைக்கப்பட்டனர். யுனெஸ்கோ அந்தஸ்து பெற்ற பாரம்பரியமான நீலகிரி மலை ரயில் தடம் புரண்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

# குடி போதையில் அடி ,உதை காஞ்சிபுரத்தில் கணவரை கொலை செய்து விட்டு மனைவி தற்கொலை



▶ சந்தானம் ▶ வேண்டா

காஞ்சிபுரம், ஜூன். 9-

காஞ்சிபுரம் பல்லவர் மேடு பகுதியை சேர்ந்தவர் சங்கர் மகன் சந்தானம்(32) இவரது மனைவி வேண்டா(26) இருவருக்கும் ஒரு ஆண்டு 3 மாதங்களுக்கு முன்பு திருமணம் ஆகியுள்ளது. இந்நிலையில் வேண்டா 6 மாத கர்ப்பிணியாகவும் இருந்துள்ளார். சந்தானம் அடிக்கடி குடித்து விட்டு வந்து மனைவியை அடித்து துன்புறத்துவதும், சந்தேகப்படுவதுமாகவும் இருந்து வந்துள்ளார்.

இந்நிலையில் சம்பவ நாளன்று குடும்பத் தகராறு காரணமாக தகராறு ஏற்பட்ட நிலையில் சந்தானத்தின் மீது கல்லை தூக்கிப் போட்டு கொலை செய்து விட்டு மனைவி வேண்டா தானும் அதே வீட்டில் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். இவர்களுக்கு பர்விஷிதா(2) என்ற மகளும் உள்ளார். சம்பவம் தொடர்பாக சிவகாஞ்சி போலீஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.





▶ தென்காசி மாவட்டம் புளியங்குடியில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டினை முன்னிட்டு தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர், சங்கரன்கோவில் எம்எல்ஏவுமான ராஜா ஈஸ்வரன் ஆலோசனைப்படி தலைமை செயற்குழு உறுப்பினர் யூ.எஸ்.டி.சீனிவாசன் தலைமையில், புளியங்குடி நகர திமுக சார்பில் பெண்களுக்கு இலவச சேலையும்,பள்ளியில் பயிலும் மாணவ, மாணவர்களுக்கு கல்வி உபகரணங்களும் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் நகர்மன்ற தலைவி விஜயா சௌந்தரபாண்டியன், நகரச் செயலாளர்எ.அந்தோணிசாமி நகர அவைத் தலைவர், வேலுச்சாமி பாண்டியன், தலைமை திமுக பேச்சாளர் சுப்பு, மாவட்ட மாணவரணி விக்ரம் மணிகண்டன், நகர்மன்ற உறுப்பினர் செந்தாமரை, பாலசுப்பிரமணியம், பத்ர சாகுல் ஆகியோர் கலந்துகொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கினர்.



▶ .மதுரை மாவட்டம் வடக்கு தாலுகா, விளாங்குடி கிராமம் 20வது வார்டு அருள்மிகு பிறையடி கருப்பசாமி கோவில் வருவாய் மற்றும் கோவில் நிர்வாகம் நிலம் தொடர்பாக மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரிடம் தமிழக மக்கள் முன்னேற்றக் கழகத்தின் மதுரை மண்டல செயலாளர் சிறுதூர் அ.சி. கோபாலகிருஷ்ணன் மற்றும் மாவட்டத் தலைவர் பி. கதிரேசன் ஆகியோர் தலைமையில் மனு கொடுக்கப்பட்டது, இதில் மாவட்ட நிர்வாகிகள் சிவகுமார், முத்துப்பாண்டி, ஆனந்த், ஆகியோர் உடன் இருந்தனர்.

### எண்ணும் எழுத்தும் திட்டத்தில் புதுக்கோட்டை மாவட்டம்

# முதன்மையான இடத்தை பெற அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் அதிகாரி பேச்சு



புதுக்கோட்டை, ஜூன்,9,

புதுக்கோட்டை வட்டார வள மையத்தில் நேற்று 142 தொடக்க, நடுநிலைப்பள்ளிகளில் ஒன்று முதல் மூன்றாம் வகுப்பு வரை எண்ணும், எழுத்தும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கையேடு மற்றும் மாணவர்களுக்கான பயிற்சி புத்தகம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு புதுக்கோட்டை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் மா.மஞ்சுளா தலைமை தாங்கி புதுக்கோட்டை வட்டார வளமையத்தைச் சேர்ந்த 142 தொடக்க, நடுநிலைப்பள்ளிகளில் ஒன்று முதல் மூன்றாம் வகுப்பு வரை பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கையேடு மற்றும் மாணவர்களுக்கான பயிற்சி புத்தகத்தினை தலைமையாசிரியர்கள், ஆசிரியர்களிடம் வழங்கி பேசும்போது கூறியதாவது, கடந்த ஆண்டு எண்ணும் எழுத்தும் திட்டத்தில் தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் சிறப்பாக ஒருங்கிணைந்து சிறப்பாக செயல்பட்டு உழைத்ததின் பயனாக மே மாதம் 25 ந்தேதி புதுக்கோட்டையில் விளையாட்டுத்துறை அமைச்சரால் ஆய்வு கூட்டத்தில் பாராட்டு தெரிவித்த நிகழ்வு நாம் அனைவரையும் பெருமைப்பட வைத்துள்ளது.

இன்று முதல் பள்ளிகள் திறப்பதற்கு முன்பாக மாவட்டத்தில் உள்ள 1432 தொடக்க, நடுநிலைப்பள்ளிகளுக்கும் எண்ணும், எழுத்தும் சம்பந்தமான கையேடு மற்றும் பயிற்சி புத்தகம் அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. எனவே இந்த ஆண்டும் எண்ணும், எழுத்தும் திட்டத்தில் புதுக்கோட்டை மாவட்டம் மாநிலத்திலேயே முதன்மையான இடத்தினை பெற அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டு மாணவர்களுக்கு சிறப்பாக வழிகாட்ட கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அவர் பேசினார். இந்த நிகழ்ச்சியில் புதுக்கோட்டை முதன்மைக்கல்வி அலுவலக பள்ளித்துணை ஆய்வாளர் கி.வேலுச்சாமி, புதுக்கோட்டை வட்டார வள மைய மேற்பார்வையாளர் டயானா, ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வியின் புதுக்கோட்டை கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் (தொடக்கக்கல்வி) வீரப்பன், வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுனர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# புதுக்கோட்டை சுதர்சன் பொறியியல் கல்லூரியில் இ–பாக்ஸ் திறன் மையத்திற்கான நேர்காணல்



புதுக்கோட்டை, ஜூன்.9-

சுதர்சன் பொறியியல் கல்லூரியில் அமைந்துள்ள இ-பாக்ஸ் திறன் பயிற்சி மையம், பொறியியல் முடித்த பட்டதாரி மாணவ, மாணவியருக்கு கணினி திறன்களில் ஜாவா, பைத்தான் போன்ற மூன்று மாத சான்றிதழ் பயிற்சிகளை அளித்து வருகிறார்கள். 2022 முதல் நடத்தப்பட்டு வரும் இப்பயிற்சி மையத்தின் மூலம் கிட்டத்தட்ட நூற்றுக்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் கணினி திறன்களை மேம்படுத்தி மேலும் தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு நிறுவனங்களில் வேலை வாய்ப்பை பெற்றுள்ளனர்.

இதன்படி இந்த ஆண்டிற்கான மூன்று மாத பயிற்சி முடிந்த நிலையில் நேற்று டாசா ஐ.டி சர்வீஸ் திருச்சி நிருவனத்தின் மனித வள மேம்பாட்டு அதிகாரிகள் கல்லூரியில் வளாக நேர்காணலை மூன்று சுற்றுகளாக நடத்தி மாணவ ,மாணவியரை தேர்வு செய்தனர். இந்நிகழ்ச்சியை கல்லூரியின் வேலைவாய்ப்பு ஒருங்கிணைப்பாளர் மற்றும் செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு அறிவியல் துறை தலைவர் சூ. ஜான் ஜோசப் ஏற்பாடு செய்திருந்தார்.

நேர்காணலை கல்லூரி முதல்வர் மற்றும் இ பாக்ஸ் திறன் மையத்தின் தலைவர் ஸ்ரீனிவாசன் துவக்கி வைத்தார். மேலும் கல்லூரி வளாகத்தில் உள்ள இ-பாக்ஸ் திறன் மையத்தின் பொறுப்பாளர் உதவி பேராசிரியர் மதுமதி இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். இதில் 17 மாணவ, மாணவியர் டாசா ஐடி சர்வீஸ் திருச்சியில் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு பிரதீப் குமார் தலைமை இன்னோவேஷன் அதிகாரி ஆம்ஃபி வெஞ்சர்ஸ் சுதர்சன் கல்வி குழுமத்தின் தாளாளர் ஸ்ரீ கே. விஜய் குமார் வாழ்த்து தெரிவித்தனர்.

# ஆவுடையார்கோவிலில் மரத்தை நடுவே வைத்து போடப்பட்ட சாலை : சரிசெய்ய பொதுமக்கள் கோரிக்கை



ஆவுடையார்கோவில், ஜூன்.9-

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவிலில் உள்ள காசாவயல் கிராமத்தில் தலித் குடியிருப்புக்கு செல்கின்ற பாதை தற்சமயம் பேவர் பிளாக் கொண்டு பல லட்சங்கள் செலவு செய்து சாலை அமைக்கப்பட்டுள்ளது, ஆனால் சாலையின் நடுவில் உள்ள மரத்தை அகற்றாமல் சாலையை சுற்றியும் பேவர் பிளாக் கற்களால் சாலை அமைத்துள்ளார்கள்.

சாலையின் வாகனங்கள் செல்ல இயலாத சூழலில் சாலை அமைக்கப்பட்டுள்ளது, இரவு நேரங்களில் செல்லும் போது சாலையின் நடுவில் மரம் இருப்பதை கவனிக்காமல் சென்றால் விபத்து ஏற்படும் அபாயம் உள்ளதால் வகனஓட்டிகள் கடும் சிரமத்திற்க்கு ஆளாகின்றனர், ஒரு சில பஞ்சாயத்துகளில் பெயரளவில் பில் எடுக்க வேண்டும் என்பதற்காக இவ்வாறு சாலை அமைத்து பொதுமக்கள் பயன்படுத்த முடியாத சூழலில் உள்ளது சமூக ஆர்வலர்களிடையே கேள்வியை எழுப்பி உள்ளது, எனவே உடனடியாக இதனை சரி செய்ய பொதுமக்கள் கோரிக்கை வைக்கின்றனர்.



▶ மதுரை திருப்பரங்குன்றம் வளையங்குளம் பகுதியில் வரும் ஆகஸ்ட் 20ஆம் தேதி அ.தி.மு.க பொன்விழா மாநாடு நடைபெறும் இடத்தில் தூய்மை பணியை முன்னாள் அமைச்சர்கள் செல்லூர் ராஜ், ஆர்.பி. உதயகுமார், மாவட்டச் செயலாளர் ராஜன் செல்லப்பா, எம்.எல்.ஏ. , பெரிய புள்ளான் எம்.எல்.ஏ., ராஜ் சத்யன், வக்கீல் ரமேஷ், நிலையூர் முருகன், ஜெ. ராஜா, வெற்றி வேல், எம்.எஸ். பாண்டியன், குமார், கே.சி.பி. ஜெயக்குமார், அழகப்பன், முன்னாள் எம்.எல்.ஏ தமிழரசன், முன்னாள் எம்.எல்.ஏ கோபாலகிருஷ்ணன், கார்சேரி கணேசன், பொன் ராஜேந்திரன், வாசு, கார்த்திகேயன், ராஜேந்திரன், கருப்பாயூரணி சுரேஷ்குமார், மேலூர் சரவணகுமார், சாகுல், வெள்ளரிப்பட்டி பிரபு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# ஆரணியில் பால் வியாபாரியை கத்தி முனையில் மிரட்டி செயினை பறித்துச் சென்ற 2 வாலிபர்கள் சிறையில் அடைப்பு



ஊத்துக்கோட்டை, ஜூன்9-

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியம், கண்ணூர் கிராமம்,பெருமாள் கோவில் தெருவை சேர்ந்தவர் உதயகுமார்(வயது29) ஆவார். இவர் தண்டலச்சேரி பகுதியில் பால் டெப்போ ஒன்றை நடத்தி வருகிறார். இந்நிலையில், இவர் நேற்று மாலை ஆரணி பஜார் வீதியில் உள்ள அம்மன் கோவில் அருகே கொரியர் சர்வீஸ் கடைக்கு தனது மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார்.

அப்பொழுது அவருக்கு எதிரே ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு வாலிபர்கள் உதயகுமாரை வழிமறித்தனர். பின்னர்,அவரது கழுத்தில் இருந்த 12 கிராம் தங்கச் செயினை பறிக்க முயன்றனர். இதனை தடுத்த உதயகுமாரை கத்தி முனையில் மிரட்டி சரமாரியாக தாக்கினர்.

பின்னர், அவரது கழுத்தில் இருந்த தங்கச் செயினை பறித்துக் கொண்டு கண்ணிமைக்கும் நேரத்தில் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றனர். அருகில் இருந்தவர்கள் அவரை மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்று அனுமதித்தனர்.

பின்னர், இந்த சம்பவம் குறித்து ஆரணி காவல் நிலையத்தில் உதயகுமார் புகார் செய்தார். எனவே,போலீசார் வழக்கு பதிவு செய்து பால் வியாபாரியை கத்தி முனையில் மிரட்டி தங்கச்செயினை பறித்துச் சென்ற ஆரணி புதிய தமிழ் காலனியைச் சேர்ந்தவர்களான தமிழ் (எ) தமிழரசன்(வயது25), கார்த்திக்(வயது23) ஆகியோரை கைது செய்து காவல் நிலையம் கொண்டு வந்தனர்.

பின்னர், அவர்கள் கொடுத்த தகவலின்படி தங்க செயினை போலீசார் பறிமுதல் செய்தனர். விசாரணையில் தமிழ் (எ) தமிழரசன் மீது பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளது தெரிய வந்துள்ளது.பின்னர்,போலீசார் குற்றவாளிகள் இருவர் மீதும் வழக்கு பதிவு செய்து பொன்னேரி முதல் நிலை குற்றவியல் நீதிமன்ற மாஜிஸ்ரேட் முன்னிலையில் ஆஜர் செய்து பொன்னேரி கிளை சிறையில் அடைத்தனர். பட்டப்பகலில் பால் வியாபாரியிடம் வாலிபர்கள் இரண்டு பேர் கத்தி முனையில் செயின் பறிப்பில் ஈடுபட்ட சம்பவம் இப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

PUDUGAI VARALARU – National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# ஓபிஎஸ் வழக்கு பதவி பசி உயர் நீதிமன்றத்தில் அதிமுக வாதம்

# நீலகிரி மலை ரயிலின் பெட்டி தடம் புரண்டது பயணிகள் உயிர்த்தபினர்





# புதுக்கோட்டையில் பெய்த சூறாவளி மழை வாழை உள்ளிட்ட பயிர்கள் நாசம்


சென்னை / புதுக்கோட்டை | 09.06.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

நான்காம் மிண்டோ பிரபு , இந்தியாவின் 36வது பிரித்தானிய ஆளுநர் (பி.1845) (இ.1914)



நந்தினி சத்பதி , ஒடிசாவின் 8வது முதலமைச்சர் (பி.1931) (இ.2006)



இராமச்சந்திர காந்தி , இந்திய மெய்யியல் அறிஞர் (பி.1937) (இ.2007)



கிரண் பேடி , இந்தியக் காவல்துறை அதிகாரி, செயற்பாட்டாளர் (பி.1949)



## இன்றைய நினைவு நாள்

பண்டா சிங் பகதூர் , இந்தியத் தளபதி (பி.1970) (இ.1716)



பிர்சா முண்டா , இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (பி.1875) (இ.1900)



கொகினேனி ரங்க நாயுகுலு , இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர், அரசியல்வாதி (பி.1909) (இ.1995)

